# அணுசக்தி அதிகாரசபை - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அணுசக்தி அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் பணிக் கொடைக்கான நிதி ஏற்பாட்டுக் கணிப்பீட்டில் பணிக் கொடை சூத்திர முறைமை அல்லது காப்பீட்டு கணக்கிட்டியல் முறைமை பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், அதிகார சபை 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிதிஏற்பாட்டை மேற்கொண்டிருந்தது.

(ஆ) இ.க.நி. 18 - ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களில் குறித்துரைக்கப்பட்டவாறு ஐந்தொகைத் திகதியில் தீர்மானிக்கப்பட வேண்டிய நியாயமான பெறுமதியிலிருந்து பொருட்படுத்தக் கூடியளவு, சொத்துக்கள் கொண்டுள்ள தொகை வித்தியாசப்படவில்லையா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அதிகாரசபை சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்திருக்கவில்லை. மேலும், ரூபா 87.82 மில்லியன் வரலாற்றுக் கிரயமுடையதும் முற்றாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதுமான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அதிகார சபையால் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன.

(இ) இ.க.நி. 36 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அதிகாரசபை அறவிட முடியாத மற்றும் ஐயக் கடன்களிற்காக ஏற்பாட்டினை செய்திருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சர்வதேச அணுசக்தி முகவராண்மை (ஐஏஈஏ) செயற்திட்டங்களை நாடுபூராகவும் அமுலாக்குவதற்கான இலங்கையின் ஒருங்கிணைப்பாளராக அதிகாரசபை செயற்பட்டுவருகிறது. அதன் பிரகாரம் சர்வதேச அணுசக்தி முகவராண்மை (ஐஏஈஏ) இன் பல நோக்க சிறு அளவு கதிர்வீச்சு அபாயமற்ற (எம்ஜீஜ்எவ்) செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 9,417,737 பெறுமதியான நன்கொடைச் சொத்துக்கள் அதிகாரசபைக்கூடாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், அதிகாரசபையானது தவறுதலாக அந்த நன்கொடையளிக்கப்பட்ட விடயங்களை அதிகாரசபையின் சொத்துக்களாக கணக்கிட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் கீழ் உள்ளடக்கியிருந்தது. இருப்பினும், மேற்குறிப்பிட்ட சொத்துக்களின் உரித்துடைமை செயற்திட்டத்தின் சம்பந்தப்பட்ட அமுலாக்கும் முகவர்களால் பொறுப்பேற்க்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகார சபையின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் நிலையான சொத்தின் மீதிகள் பேரேட்டுக் கணக்குகளின் இறுதி மீதிகளிலிருந்து வித்தியாசப்பட்டிருந்ததுடன் ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு மொத்த வித்தியாசம் ரூபா 1,110,049 ஆன தொகையாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சொத்தின் வகை | பேரேட்டுக் கணக்குகளின் படி மீதி | நிலையான சொத்துப் பதிவேட்டின் படி மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| விஞ்ஞான உபகரணங்கள் | 79,436,872 | 80,264,736 | 827,864 |
| அலுவலக உபகரணங்கள்/ தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 8,231,002 | 7,951,754 | 279,248 |
| ஏனைய உபகரணங்கள் | 452,226 | 449,289 | 2,937 |
| மொத்தம் | | | 1,110,049 |

(இ) பொதுப் பேரேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களிற்கும் இடையில் 15 விடயங்களின் மீதிகளில் ரூபா 1,864,172 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) வெளிநாட்டுக் கம்பனியொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,268,990 பெறுமதிகொண்ட "தேர்மோ லுமினன்ஸ் தெசிமீற்றர் (ரீஎல்டீ) கார்ட்ஸ்

மற்றும் ஹோல்டர்ஸ்'' என்பன மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களில் ஐஏஈஏ இறுதி இருப்புக்களாக (நன்கொடை) காட்டப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(உ) விஞ்ஞான உபகரணங்களை ஐஏஈஏ இனூடாக கொள்வனவு செய்வதற்கு எடுக்கப்பட்டிருந்த அமைச்சரவைத் தீர்மானத்தின் படி அதிகாரசபை ஐஏஈஏ இற்கு நிர்வாகக் கிரயம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட உதவிக்காக ஐஅடொ 7,240.74 இனை செலுத்துதல் வேண்டும். மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஐஏஈஏ இற்குச் செலுத்தவேண்டியதாக இத்தொகையினை அதிகாரசபை காண்பித்திருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) அழிவுறாத பரிசோதனை நிலையம் (என்டீரீ) நடைபெறும் வேலையாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 655,226 காண்பிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 464,500 சில்லறைச் செலவினத்தை பிரதிநிதித்துவப்படுத்தியமை மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் வெளிப்பட்டது.

(எ) ரூபா 397,758 பெறுமதியான பழுதடைந்த ஆய்வுகூட நுகர்வுப்பொருள் இருப்புக்கள் எவ்வித ஏற்பாடும் மேற்கொள்ளப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2010/2011 இற்கான வருமான வரிக் கணிப்பீட்டிற்காக ரூபா 480,000 வாடகை வருமானத் தொகை கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) முடிவுற்றிருந்தும் மூலதனமாக்கப்படாது அலுவலக தன்னியக்க மென்பொருள் அமுலாக்கலுடன் தொடர்புபட்ட ரூபா 389,375 தொகையானது தொடர்ச்சியாக நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

ரூபா 1,411,292 தொகையான கடன்பட்டோர் மீதிகள் ஒரு ஆண்டிற்கும் மேலாக தீர்க்கப்படாதிருந்ததுடன், ரூபா 519,225 தொகையான மீதிகள் ஐந்து ஆண்டுகளிற்கு மேல் தீர்க்கப்படாதவையாக இருந்தன. ஐந்து ஆண்டுகளிற்கும் மேலான கடன்பட்டோர்களில் 81% ஆனவை அரசாங்க நிறுவனங்களை பிரதிநிதித்துவப் படுத்தியமை அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கதிர் வீச்சு வசதிகளாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 867,552 தொகையான நிலையான சொத்துக்களின் உள்ளதன்மை தொடர்பான போதிய சான்றுகளெதுவும் தரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமை.

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்று நிருபம் | |
| (I) 5.2.1 ஆம் பிரிவு | அதிகாரசபையின் பாதீடு பாதிடப்பட்ட வருமான செலவினக்கூற்று, பாதிடப்பட்ட ஐந்தொகை மற்றும் காசோட்டக் கூற்றினை உள்ளடக்கயிருத்தல் வேண்டும். இருப்பினும், மேற்படி ஆவணங்களுடன் மீளாய்வாண்டிற்கான பாதீட்டை அதிகாரசபை சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (II) 6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து அறுபது நாட்களின் பின்னர் அதிகாரசபை வரைபு ஆண்டறிக்கை யினை வரிசை அமைச்சு, பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிற்கான பிரதிகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபகதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (III) 8.7 ஆம் பிரிவு | 2009 யூலை மாதத்திலிருந்து 2011 மார்ச் வரை அதிகாரசபை ஊழியர்களிடமிருந்து உ.பொ.செ |

வரியினைக் கழித்து, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பியிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 618,182 ஆன தேறிய பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 3,297,783 ஆன தேறிய மிகையினை விளைவித்திருந்தமையால், அது நிதிசார் விளைவுகளில் ரூபா 3,915,965 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டிற்கான உணவுப் பரிசோதனை வருமானம் ரூபா 10.77 மில்லியனால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

### 2.2 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகார சபையின் அதிகாரச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் படி, கௌரவ மின்வலு – அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழு 1999 இலிருந்து கூடியிருக்கவில்லை. மேலும், 2006 ஆம் ஆண்டில் அதிகார சபையால் பிரேரிக்கப்பட்ட புதிய ஆலோசனைக்குழு 2011 திசெம்பர் இறுதி வரையிற் கூட கௌரவ அமைச்சரால் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல நோக்க சிறு கதிர் வீச்சு அபாயமற்ற வசதி (எம்ஜீஐஎவ்) செயற்திட்டத்தின் கிரயம் 2006 ஆம் ஆண்டில் ரூபா 302.20 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்ததுடன் உயர்ந்த விலை தளம்பல் காரணமாக மதிப்பீடு திருத்தப்பட வேண்டியிருந்தது. ரூபா 609.83 மில்லியனான திருத்தப்பட்ட மதிப்பீடு, அமைச்சரவை நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவால் அனுமதிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட காணி தொடர்பில் அதிகார சபை மற்றும் முதலீட்டுச் சபைக்கிடையில் முரண்பாடு இருந்தமையால் செயற்திட்டம் தாமதமாக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக எம்ஜீஐஎவ் செயற்திட்டம் மனிதவலு பயிற்சிக்காக சர்வதேச அணுசக்தி அதிகார சபையால் (ஐஏஈஏ) ஒதுக்கப்பட்ட நன்கொடைகளை இழந்திருந்தது. விபரங்கள் வருமாறு.

| மனிதவள ஆக்கக்கூறுகள் | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| | ஐஅடொலர் | ஐஅடொலர் | ஐஅடொலர் | ஐஅடொலர் | ஐஅடொலர் |
| நிபுணர்கள் | 68,640 | 45,045 | | | 45,000 |
| உயர் பட்டங்கள் | 51,300 | 29,000 | 207,715 | 245,115 | 50,000 |
| விஞ்ஞானிகள் வருகை | 29,280 | 25,000 | | | 25,000 |
| மொத்தம் | 149,220 | 99,045 | 207,715 | 245,115 | 120,000 |

## 2.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மழை நீரிலிருந்து பாதுகாப்பதற்காக இறப்பர் வார்ப்புகள் மற்றும் சிலிக்கோன் பசை என்பவற்றைப் பயன்படுத்தி பிரதான கட்டிடத்தின் யன்னல்களை சீலிங் செய்வதற்கான ஒப்பந்தத்தினை 2010 ஆம் ஆண்டில் அதிகாரசபை அரசாங்க தொழிற்சாலைக்கு ரூபா 1,154,234 கிரயத்தில் (பெ.சே.வரி அடங்கலாக) கையளித்திருந்தது. வேலைகள் முறையாக பூரணப்படுத்தப்டாதிருந்த போதிலும், ஒப்பந்தகாரரினால் வழங்கப்பட்ட சேவையின் தரத்தினை பரிசோதிக்காது அதிகாரசபை ரூபா 515,283 இனை செலுத்தியிருந்ததுடன் மிகுதிக் கொடுப்பனவு நிதிக்கூற்றுக்களில் நடைபெறும் வேலையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபை சில வகையான விஞ்ஞான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஐஏஈஏ இனூடாக கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. உடன்படிக்கையின் படி இந்த உபகரணங்கள் தொடர்பில் கம்பனியானது பயிற்சியினை வழங்குதல் வேண்டும். மேற்படி சேவையினைப் பெற்றுக்கொள்ளாது கொள்வனவு விலையில் உள்ளடக்கப்பட்டிருந்த பயற்சியளித்தல் செலவினமான ரூபா 582,713 இனை மேற்குறிப்பிட்ட கம்பனிக்கு அதிகாரசபை செலுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) அணுக் கதிர்வீச்சு பாதுகாப்பு பிரமாணப்படுத்தல் தொடர்பான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளல்

அணுக் கதிர்வீச்சு பாதுகாப்பு மீதான பிரமாணப்படுத்தலுடன் தொடர்புடைய 2000 யூலை 28 ஆந் திகதிய 1142/30 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாட்டின் பிரகாரம், 1969 இன் 19 ஆம் இலக்க அணுசக்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 18, 19 மற்றும் 20 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட காட்சிப்படுத்தல் அல்லது அனுக் கதிர்வீச்சு சாத்தியத்தினை வெளிப்படுத்தல் அல்லது வானொலி செயற்பாட்டு பொருட்கள் அல்லது கதிர்வீச்சு கருவிகள் போன்ற அவ்வாறான தொழில்களில் அனுசக்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட அதிகாரமின்றி எந்தவொரு நபரும் ஈடுபடுதலாகாது. அந்த அதிகாரமளித்தல் செயன்முறை பதிவுசெய்தல் மற்றும்/அல்லது அனுமதிப்பத்திர விநியோகம் மற்றும் வருடாந்த புதுப்பிலிற்கு உட்பட்டதாகும்.

இருந்தபோதிலும், மேற்படி வர்த்தமானி அறிவித்திலின் ஏற்பாட்டிற்கு முரணாக 89 நிறுவனங்கள் அனுமதிப்பத்திரமொன்றை அல்லது பல வருடங்கள் அவ்வனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்காமல் கதிர்வீச்சு உபகரணங்களிற்காக கதிர்வீச்சினைப் பயன்படுத்திவந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த நிறுவனங்களிற்கு எதிராக எடுக்கக்கூடிய எவ்வித சட்டரிதியான நடவடிக்கையினையும் 2011 திசெம்பர் 31 வரை அதிகாரசபை மேற்கொண்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | அனுமதிப்பத்திரத்தினை அல்லது அனுமதிப்பத்திர புதுப்பித்தலை பெற்றுக்கொள்ளாமை |
|---|---|---|---|
| 2008 | 308 | 155 | 101 |
| 2009 | 319 | 188 | 123 |
| 2010 | 369 | 274 | 95 |
| 2011 | 507 | 418 | 89 |

## 2.4 1969 இன் 19 ஆம் இலக்க அணுசக்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் திருத்தம்

சர்வதேச அணுசக்தி முகவராண்மை 2006 சனவரி 01 ஆம் திகதிய ஏயூரீ/எம்யூஎல்ரீ/ஐஏஈஏ/ 22 ஆம் இலக்கமுடைய தனது கடிதத்தின் மூலம், தற்போதைய அதிகாரச் சட்டம் அது சட்டமாக்கப்பட்ட காலத்தில் போதியதாக இருந்ததுடன்

நிகழ்கால சர்வதேச பாதுகாப்பு நியமங்களின் நோக்கில் சுகாதார/விவசாய மற்றும் ஏனைய துறைகளில் கதிர் வீச்சு தொழில்நுட்பங்களின் அதிகரித்த பிரயோகத்தினால் மேற்படி அதிகாரச்சட்டம் திருத்தப்பட வேண்டியதாக உள்ளதென அதிகார சபைக்கு அறிவித்திருந்தது. மேலும், அக்கறையிலுள்ள ஏதாவது முரண்பாட்டை தவிர்ப்பதற்கான நோக்கிலும் அதிகார சபையின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் எல்லை வகுக்கப்பட்டிருக்காமையாலும் தற்போதைய அதிகாரச் சட்டத்திற்கான திருத்தம் தேவைப்படுகின்றது. தற்போதைய அதிகாரச் சட்டத்திலுள்ள நலிவுகளை மீளாய்வு செய்வதற்கும் புதிய ஒரு வரைபு அதிகாரச் சட்டத்தைத் தயாரிப்பதற்குமாக 2006 இல் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நோக்கம் 2011 திசெம்பர் 31 வரை வெற்றியளித்திருக்கவில்லை.

## 2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நீண்டகாலமாக அதிகாரசபையின் வங்கிக் கணக்கொன்றில் ரூபா 105,000 மீதியொன்று பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தின் படி அதிகாரசபையின் நிதியினைப் பயன்படுத்தியும் இலங்கை மின்சார சபையிடம் (சீஈபீ) மீள்நிரப்பல் பெற்றும் சமனலவெவ குளக்கட்டின் பிரதான கசிவுப் பிரதேசங்களை மெய்மையாய்வதற்கான ஆய்வொன்றை மேற்கொள்வதற்கு அதிகாரசபை அங்கீகாரமளித்திருந்தது. அதிகாரசபையின் நிதியைப் பயன்படுத்தி இச்செயற்திட்டத்திற்காக ரூபா 1,736,117 செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் சீஈபீ இடமிருந்து மீளளிப்பை பெற்றுக்கொள்ளாது நிதிக்கூற்றுக்களில் ஆராய்ச்சி அபிவிருத்திச் செயற்திட்டமாக காட்டப்பட்டிருந்தது.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,102,318 தொகையொன்று வினைத்திறனாக பயன்படுத்தப்படாது அதிகாரசபையின் வங்கிக் கணக்கொன்றில் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.6 கணக்களிப்பும் நல்லாட்சியும்

(அ) 2011-2015 வரையான காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு அதிகாரசபை தனியார் கம்பனியொன்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கை (எம்ஓயூ) இன் படி எம்ஓயூ கைச்சாத்திடப்பட்டு தொன்நூறு நாட்களிற்குள்

கூட்டிணைந்த திட்டம் அதிகாரசபையிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும் கணக்காய்வு பரிசோதனைத் திகதியான 2012 யூன் 06 வரையில் அது கையளிக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டிணைந்த திட்டத்தினைப் பெற்றுக்கொள்ளாது கூட்டிணைந்த திட்டத்தினைத் தயாரிப்பதற்காக அதிகாரசபையினால் மேலும் ரூபா 600,000 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

அதிகார சபையின் சுமுகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்வது உள்ளகக் கணக்காய்வாளரின் பொறுப்பாகும். இந்த நோக்கத்திற்காக உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் ஆண்டுதோறும் தயாரிக்கப்படுகின்றது. எனினும், மீளாய்வாண்டின் வருடாந்தக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள பல விடயங்கள் முழுமைப்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டதுடன் அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒரு உத்தியோகத்தரை மட்டும் கொண்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தரிற்கும் மேலதிக வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

## 2.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும், உண்மையானவற்றிற்கு இடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை காட்டுகின்றது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரமான எனது விபரமான அறிக்கையின் மூலம் அதிகார சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வரிப் பொறுப்பு

(ஆ) ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

(இ) கிடைக்க வேண்டிய கணக்குகள்

(ஈ) பதிவேட்டுப் பொருட்கள்

(உ) மனித வள முகாமைத்துவம்

(ஊ) கூட்டிணைந்த திட்டம்

(எ) பாதீடு

(ஏ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்குதல்